## மே - 13 - சனி

### தூய பாத்திமா அன்னையின் நூற்றாண்டு நிறைவு

### “நீங்கள் என்பெயரால் எதைக்கேட்டாலும் செய்வேன்” (யோவா.14:14)

**முதல் வாசகம் : தொடக்க நூல் 3 : 9 – 15, 20**

ஆக்காலத்தில் ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, ”நீ எங்கே இருக்கின்றாய்?” என்று கேட்டார். ”உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி ,ருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன்” என்றான் மனிதன். ”நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?” என்று கேட்டார். அப்பொழுது அவன், ”என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்” என்றான். ஆண்டவராகிய கடவுள், ”நீ ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று பெண்ணைக்கேட்க, அதற்குப் பெண், ”பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்” என்றாள். ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம், ”நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப் பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்” என்றார். மனிதன் தன்மனைவிக்கு ”ஏவாள்” என்று பெயரிட்டாள் ஏனெனில் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்.

**பதில்பாடல் :** மாந்தர் அனைவரும் தம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

**நற்செய்தி : யோவான் 2 : 1 – 11**

அக்காலத்தில் கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, ”திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” என்றார். இயேசு அவரிடம், ”அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம், ”அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார். யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர்கொள்ளும். இயேசு அவர்களிடம், ”இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். பின்பு அவர், ”இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள்” என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, ”எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர் யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?” என்று கேட்டார். இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே கொடுக்கப்பட்ட ஒப்புயவர்வற்ற பெயர்தான் இயேசுக்கிறிஸ்து (தி.ப.4:12). அந்த இயேசுக்கிறிஸ்துவை நம்முடைய தனிப்பட்ட மீட்பராக ஏற்றுக் கொண்டு “இயேசுவே ஆண்டவர்” என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நாம் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவோம் (உரோ.10:9). “இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர், அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் மாட்சிக்காக இயேசுக் கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடட்டும்” (பிலி.2:10-11) என்ற பவுலடியாரின் வார்த்தைக்கிணங்க கடவுளை மாட்சிமைப்படுத்திய இயேசுவின் ஈடுஇணையற்ற பெயரை உச்சரிக்கும் ஒவ்வொருவருக்கும் மீட்பு உறுதிசெய்யப்படுகின்றது. “நீங்கள் கனிதரவும் நீங்கள்தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.” (யோவா.15:16) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப நாம் இந்த உலகில் கனிதரக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றார். இயேசு என்ற உன்னதமான பெயரை உச்சரித்தே ஆக வேண்டும். நாம் மீட்கப்பட்டுள்ளோம் என்பதை நமது வாழ்வில் நடக்கும் அற்புதங்களும், அதிசயங்களும் நமக்கு எண்பித்துக்காட்டுகின்றன. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு நமக்கு உறுதியளித்ததைப் போல அவருடைய வல்லமை மிக்க நாமத்தினால் நாம் கடவுளிடம் வேண்டினால் நமக்கு அற்புதங்கள் நடைபெறும், வல்ல செயல்கள் பல நம் வாழ்க்கையில் நிறைவேறும். இதையே திருத்தூதர் பேதுரு தனது வாழ்க்கையின் சக்தியாக அனுபவித்த “இயேசுவின் பெயரே இவருக்கு வலுவூட்டியது. அவர் பெயர் மீது கொண்டிருந்த நம்பிக்கையால்தான் இது நடந்தது. இந்த நம்பிக்கையே உங்கள் அனைவர் முன்பாகவும் இவருக்கு முழுமையான உடல் நலனைக் கொடுத்துள்ளது” (தி.ப.3:16) என்று சான்று பகர்ந்தார். எனவே மீட்பின் சக்தியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இயேசுவின் நாமத்தை தினமும் உச்சரிப்போம். வாழ்வின் தடைகளை உடைத்தெறிந்து வெற்றியின் பிள்ளைகளாக நாம் வாழ்வோம். இயேசுவின் நாமம் இனிதான நாமம். இணையில்லா நாமம் இன்ப நாமம். பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும் பரம சந்தோஸம் பக்தருக்களிக்கும்.